ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2316/42 - 2023 ජනවාරි මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.01.26

2316/42 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: කැ/ප්‍රා/ලේ/අත්8/9/1.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2015/PC/250.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**
மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 535, பெப்பிலியான மேற்கு கிராம அலுவலர் பிரிவில், பெப்பிலியன மேற்கு (பொரலஸ்கமுவ நகர சபை எல்லைக்குள்) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகம் சார்பில் கொழும்பு மாவட்ட சிரேஸ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2022.10.05 ஆந் திகதிய கடத்திரல் வரைபட இல. 521213 (தொகுதி இல. 04, தாள் இல. 02) இல் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்ட 0.0336 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**01. துண்டு இல. 1**
காணியின் பெயர்: கஜுகஹவத்த; காணியின் விபரம்: விளையாட்டு மைதானம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ஸ்ரீயாணி குணதிலக்க, இல. 20, விஜேராம மாவத்தை, கொழும்பு. (காணி எடுத்தல் பணிகளைப் பூர்த்தி செய்வதற்காக); விஸ்தீரணம்: 0.0336 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கெஸ்பேவ பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும் மேலும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும்

குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. பி. பிரேமதாச,
பிரதேச செயலாளர்,
கெஸ்பேவ.

பிரதேச செயலகம்,
கெஸ்பேவ.
2023, சனவரி 23.

EOG 01 - 0255

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: தி/காணி/எல்2/சுவீVI/146.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 4-3/6/2018/
எச்டபிள்யு/451.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், திஹகொட பிரதேச செயலாளர் பிரிவில், இல. 335ஏ - கப்புதூவ கிராம அலுவலர் பிரிவிலுள்ள, கப்புதூவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அதிபதியினால் தயாரிக்கப்பட்ட 2022.11.28 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. மாஎ. 2916 இல் துண்டு இல. 01 இல் விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.0427 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய ஒரு (01) காணித்துண்டின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு:

**01. துண்டு இல. 1**

காணியின் பெயர்: பளுவத்தை என அழைக்கப் படும் காணியின் 5/6ஆவது துண்டு; விபரம்: தோட்டம், கலப்புப் பயிர்ச் செய்கை மற்றும் கிணறு ஒன்று என்பன காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: - ; விஸ்தீரணம்: 0.0427 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு திஹகொட பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும் மேலும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

டி. எச். சந்தமாலி,
பிரதேச செயலாளர்,
திஹகொட.

பிரதேச செயலகம்,
திஹகொட.
2023, சனவரி 23.

EOG 01 - 0256